## வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து பீஎல்சி கம்பனி - 2016

வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து பீஎல்சி கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன். இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக்கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கம்பனியின் தொடர்ந்து இயங்கும் தன்மை

1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை (2008 ஆம் ஆண்டைத் தவிர) கம்பனியின் நட்டங்கள் நிலைத்திருந்ததுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முறையே ரூபா 628,478,493 மற்றும் 634,157,397 தொகையான எதிர்மறை தேறிய சொத்துக்கள் நிலைமையொன்று காணப்பட்டது. மேலும், முந்திய யுத்த நிலைமையின் போது சீமெந்து தொழிற்சாலை முழுமையாக அழிக்கப்பட்டதுடன் கம்பனியின் தொழிற்பாடுகள் சீமெந்து பைகளின் இறக்குமதி மற்றும் விற்பனைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந் நிலைமைகளின் கீழ், 2016 ஒக்டோபர் 20 இல் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், 2016 ஆம் ஆண்டில் மீள்கட்டமைத்தல் செயற்பாடுகளின் கீழ் நஷ்டயீட்டை செலுத்தியதன் பின்னர் ஊழியர்களினை அகற்றுவதன் மூலம் அரசாங்கத்தின் உரிமைத்துவத்தினை முழுமையாக நீக்குவதற்கு வர்த்தக மற்றும் வாணிப அமைச்சின் செயலாளர்களுக்கு முன்மொழிதல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மேற்குறித்த விடயங்கள் கம்பனியின் தொடர்ந்து இயங்கும் தன்மையின் மீது பாதகமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இனங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

காங்கேசன்துறையிலுள்ள சீமெந்து தொழிற்சாலையில் இரும்பின் விற்பனையிலிருந்து ரூபா 20,000,000 தொகையொன்று பெறப்பட்டு நிலையான வைப்பொன்றில் முதலிடப்பட்டிருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கையில் அது கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) பல வருடங்களுக்கு முன்னர் அழிக்கப்பட்டிருந்த காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் உள்ளதன்மையினை மெய்மையாய்வு செய்யாது தொழிற்சாலையின் சொத்துகளாகக் காணப்பட்ட ரூபா 229,957,152 ஆன முன்னைய பெறுமதிக்கு பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு மற்றும் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் ரூபா 156,255 தேறிய பெறுமதியொன்றினையுடைய அலுவலக உபகரணங்களுக்கு பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டு கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கு போதுமான சான்றுகளின்மை

பின்வரும் கணக்குவகைகளுக்கு எதிரே காட்டப்பட்டுள்ளவற்றிற்கு சான்றுகள் கணக்காய்விற்கு காணப்படாததுடன் மற்றும் அவற்றை திருத்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது கணக்காய்வில் ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | வகை | பெறுமதி ரூபா. | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| (i) | பிற்போடப்பட்ட மானியங்கள் | 74,197,970 | மானியங்களுடன் தொடர்புடைய கடிதங்கள். |
| (ii) | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 229,957,152 | நிலையான சொத்துக்களின் பதிவேடுகள், பௌதீக பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகள். |
| (iii) | வியாபார மற்றும் ஏனைய பணரீதியான பெறவேண்டியவை. | 11,210,170 | மீதிகள் மற்றும் கடன்கள் சேவைகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள். |
| (iv) | வியாபார மற்றும் ஏனைய பணரீதியான செலுத்தவேண்டியவை. | 40,433,807 | மீதிகள் மற்றும் கடன்கள் சேவைகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள். |
| (v) | சீமெந்தின் இருப்பு | 3,188,671 | பௌதீக பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகள் |
| (vi) | நீண்டகால பணரீதியான செலுத்த வேண்டியவை | 757,223,883 | மீதிகளின் உறுதிப்படுத்தல் மீதான ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய கடன் ஆவணங்கள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய மீதிகள் ரூபா 11,810,170 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகள் ரூபா 10,375,684 தொகையாகக் காணப்பட்ட அதேவேளை, அவற்றில் 01 தொடக்கம் 03 வருடங்களுக்கிடைப்பட்ட பழைய கடன் மீதிகள் ரூபா 1,434,486 ஆகக் காணப்பட்டது. அந்த நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 61,908,116 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகள் ரூபா 33,589,968 தொகையாகவும் அதேவேளை 01 தொடக்கம் 03 வருடங்களுக்கிடைப்பட்ட பழைய கடன் மீதிகள் ரூபா 10,665,998 தொகையாகக் காணப்பட்ட அதேவேளை 01 வருடத்திற்குக் குறைந்த கடன் மீதிகள் ரூபா 17,652,150 ஆகக் காணப்பட்டது. அந்தக் கடன் மீதிகளினைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் | |
| பிரிவு 133(I)(அ) மற்றும் (ஆ) | கணக்காண்டு முடிவடைந்து 06 மாத காலங்களுக்குள் பங்குதாரர்களுக்கான வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் பணிப்பாளர் சபையினால் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.6 ஆம் பிரிவு | மீளாய்வாண்டினுடைய செயலாற்றல் அறிக்கை பணிப்பாளர் சபையினால் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு செய்யப்பட்டு காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருந்த போதிலும், அதற்கமைய கம்பனி நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 5.1 ஆம் பிரிவு | கூட்டிணைந்த திட்டம் யதார்த்தமானதாக மற்றும் அடையக்கூடியதாகக் காணப்பட வேண்டிய போதிலும், கம்பனியினால் 2016 – 2021 இன் காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சீமெந்தின் இறக்குமதி மீதான புள்ளிவிபரங்களின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில் 300,000 மெற்றிக் டொன்களுக்கு இலக்கொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உண்மையான இறக்குமதி 8,260 மெற்றிக் டொன்களாக காணப்பட்டது. |
| (iii) 5.1.3 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள், நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் நிதியாண்டின் தொடக்கத்திற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். இருப்பினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | 9.3.1(vi) மற்றும் (vii) பிரிவு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக 02 பதவிகளுக்கு 03 மாதங்கள் காலப்பகுதியினை மிகைத்து 02 பதில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேறிச் சுற்றறிக்கை | ரூபா 74,738,644 கூட்டுத்தொகையான கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 8,048,091 நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 5,678,904 ஆன தேறிய நட்டத்தினை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,369,187 ஆன முன்னேற்றத்தினைக் சுட்டிக்காட்டுகின்றது. நிர்வாகச் செலவினங்கள் மற்றும் விநியோகச் செலவினங்கள் முறையே ரூபா 8,772,736 மற்றும் ரூபா 4,336,630 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஏனைய வருமானம் ரூபா 18,794,381 ஆல் அதிகரித்திருந்தமை நிதிசார் விளைவுகளில் முன்னேற்றத்திற்குக் பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் குறிக்கோள்களாக சீமெந்தின் இறக்குமதி, உற்பத்தி மற்றும் விற்பனை, சீமெந்துடன் தொடர்புடைய பொருட்களின் உற்பத்தி, முதலீடுகளினை மேற்கொள்ளல், முகவராகச் செயற்படல் மற்றும் சொத்துக்களினை முன்னேற்றமடையச் செய்தல் உள்ளடங்கலாக கம்பனியின் 1981 செப்தெம்பர் 03 ஆம் திகதிய பிபீஎஸ் 1123 ஆம் இலக்க கம்பனியின் அகவிதியானது 33 குறிக்கோள்களினைக் உள்ளடக்கியுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களினை அடைதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியினால் கம்பனியின் ஸ்தாபிப்பின் போது அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஏனைய குறிக்கோள்கள் எதனையும் அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்காத அதேவேளை 2016 ஆம் ஆண்டில் கம்பனி சீமெந்தின் இறக்குமதி மற்றும் விற்பனையினை மாத்திரம் மேற்கொண்டு கொண்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது 8,260 மெட்ரிக் டொன் சீமெந்தினை கம்பனி இறக்குமதி செய்திருந்ததுடன் அந்த நோக்கத்திற்கு கம்பனிக்கு ரூபா 75,708,623 கிரயமொன்று நேரிட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அனைத்து 8,260 மெட்ரிக் டொன் சீமெந்தினையும் கம்பனி விற்பனை செய்திருந்தது. அவற்றில் ரூபா 110,587,354 வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. கம்பனியின் மொத்த விற்பனைகள் கிரயம் ரூபா 107,201,864 ஆகக் காணப்பட்டமையினால், மீளாய்வாண்டின் போது ரூபா 3,385,490 மொத்த இலாபமொன்று மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கைத்தொழில் மற்றும் வானிப அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு விலாசமிடப்பட்ட 2016 ஒக்டோபர் 20 ஆந் திகதிய PE/RES/VRS-1-2016 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், காங்கேசன்துரையிலுள்ள காணியை கம்பனி சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு கையழிக்க வேண்டும். அத்துடன் கூட்டுத்தாபனம் உரிமையைக் கொண்டுள்ள 62.45 சதவீத பங்குகளினையும் மற்றும் அரசாங்கம் உரிமையைக் கொண்டுள்ள 12.82 சதவீத பங்குகளினையும் பங்குச்சந்தையில் விற்று அரசாங்கத்திற்கு இலாபமொன்றினை உழைப்பதுடன் முறைமையானதொரு முறையில் கூட்டுத்தாபனத்தின் முன்மொழியப்பட்ட புதிய கூட்டிணைந்த திட்டத்தினை அமுல்படுத்தலுக்கு மற்றும் அவற்றின் செயலாற்றலினை நிதியமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும். தொடர்புடைய முன்மொழிவுகளின் அமுல்படுத்தலுக்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

2016 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் மீள்கட்டமைக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அத்திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தன்னார்வ இழப்பிட்டுத் திட்டத்தின் கீழ் 2016 யூலை 31 இல் சேவையிலிருந்து பதவி விலகியிருந்தனர். பின்பு, பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின் மீது ஒப்பந்த அடிப்படையின் கீழ் மூன்றாம் நிலை மட்டத்தின் 03 ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டு அறிக்கைகள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2017 யூலை 07 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 இன் உறுப்புரைகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று செயற்பட்டிருக்காததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் கூட மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீட்டு மற்றும் நிதிசார் கட்டுப்பாடு | நிதிசார் கட்டுப்பாடுகளின் முறையான முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்குத் தவறியமை, வரி மற்றும் கடன்கள் போன்ற அடிப்படையான செலுத்துகைகளை மேற்கொள்ளத் தவறியமை, கம்பனியினால் காசுப் பெறுவனவுகளினை பதிவு செய்தல் மற்றும் காசுக் கொடுப்பனவுகளின் மீதான கணக்குகள் / கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கங்களின் மீது ஒரு முறையான முறைமையொன்று பேணப்படாமையின் காரணமாக அவற்றின் மீதான சரியானதன்மை மற்றும் முழுமைத்தன்மையினை சான்றுப்படுத்த முடியவில்லை. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் பதிவேடுகள் பேணப்படாமை, பொருள் மெய்மையாய்வுச் சபையினை நியமிப்பதற்குத் தவறியமை மற்றும் தொழிற்சாலை சொத்துக்கள் உள்ளடங்களாக சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்கு மற்றும் மீள் மதிப்பீடு செய்வதற்குத் தவறியமை. |
| (இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நிலுவையாகவுள்ள கடன் மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கத்தவறியமை மற்றும் தொடர்புடைய அறிக்கைகளின் விபரமான முறையற்ற பராமரிப்பு |
| (ஈ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) 2016 யூலையில் கம்பனியின் மீள் கட்டமைப்புடனான உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளடங்களாக பதவியணியினரின் பதவி விலகலின் பின்னர் உள்ளகக் கட்டுப்பாட்டின் முறைகள் பலவீனமானதொரு நிலையில் காணப்பட்டமை.<br><br>(ii) அரசின் வரிச் சட்டங்களின் பிரகாரம் அறிக்கைகள் பராமரிக்கப்படாமை மற்றும் வரிகளின் முறையான செலுத்துகைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |